**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-09042025-8580

Volume: 9

Issue: 4

Month: April

Year: 2025

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 10.01.2025

Accepted: 23.03.2025

Published: 01.04.2025

Citation:
Agilan, Dhilip Kumar a/l. "Widows in Malaysian Tamil Folk Songs." *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 4, 2025, pp. 77–81

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i4.8580

*Corresponding Author:
dhilipchandrusp@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Widows in Malaysian Tamil Folk Songs

**Dhilip Kumar a/l Agilan**
*Doctoral Student, Faculty of Language and Communication*
*Universiti Pendidikan Sultan Idris, Tanjong Malim, Perak*
*http://orcid.org/0000-0002-0039-4594*

**Abstract**
*This study explores the portrayal of Indian widows in Malaysian Tamil folk songs, highlighting their suffering, marginalization, and societal restrictions. Widows are depicted as enduring profound grief, social exclusion, and strict cultural norms, including the removal of the thaali, restrictions on clothing and adornment, limited access to nutritious food, and a life of hardship. The verses in these folk songs vividly express their sorrow, with some widows lamenting their fate and others wishing for death alongside their husbands. By analyzing these themes, this research examines how Malaysian Tamil folk songs reflect the struggles of widows and reinforce traditional beliefs that subjugate them. The findings contribute to a deeper understanding of widowhood in Tamil folk traditions and its implications for Indian women in Malaysia.*
***Keywords:*** *Widowhood, Malaysian Tamil Folk Songs, Social Oppression, Thaali Removal, Cultural Restrictions, Grief and Marginalization.*

**References**

1. Bakshi, A. (2024). Widowhood Practices Leading to Violation of Human Rights in India. International Journal for Multidisciplinary Research (IJFMR), 6 (1), 1-9. https://www.ijfmr.com/papers/2024/1/13766.pdf
2. Priyadarshini, U. & Pande, R.(2021). Exploring the Politics of Widowhood in Vrindavan: An Analysis of Life Narratives of Vrindavan Widows. Advances in Applied Sociology, 11, 158-176.https://doi.org/10.4236/aasoci.2021.114012
3. Subapradha, P. & Subramaniam, S. (2022). Widowhood In Ambai's Kitchen In The Corner. International Journal of Humanities and Social Science Invention (IJHSSI), 11(9), 61-63. https://www.researchgate.net/publication/378144558_widowhood
4. Bajaj, R. (2023). Evolution In The Legal Rights Of Hindu Widows. Journal of Survey in Fisheries Sciences, 10 (1), 6774-6778. https://sifisheriessciences.com/index.php/journal/article/view/1882/1197
5. Poojaa, D. & Sofia, H. (2023). Saree as an Identity of Indian Women. International Journal of Humanities & social Science studies (IJHSSS), 12(2), 73-78. https://www.researchgate.net/publication/375952458_SAREE_AS_AN_IDENTITY_OF_INDIAN_WOMEN
6. Rai, A. (2021). SATI- From Widow Immolation To Widow Re-Marriage. Journal of Research in Humanities and Social Science, 9(3), 05-08. https://www.academia.edu/45436444/SATI_From_Widow_Immolation_To_Widow_Re_Marriage
7. Thandayutham, R. (1998). Malēciyanāṭṭuppuṟappāṭalkaḷ. Tamil Putagaalaiyam: Chennai.
8. Gomathi, G. (2018). Mangalsutra: The sacred pendant of women as symbol of Marriage in India. SAARC Culture, 6, 22-34. https://www.researchgate.net/profile/Gomathi-Gowda/publication/354715880_Mangalsutra_The_sacred_pendant_of_women_as_symbol_of_Marriage_in_India/links/614970a2519a1a381f719a59/Mangalsutra-The-sacred-pendant-of-women-as-symbol-of-Marriage-in-India.pdf
9. Watson, M. (2018). Millions of Child Widows Forgotten, Invisible and Vulnerable Report by Action on Child, Early and Forced Marriage. UN Geneva Representative, International Council of Women, (ICW-CIF): Switzerland.

# மலேசியத் தமிழ் நாட்டுப்புறப் பாடல்களில் கைம்பெண்கள்

***திலிப்குமார் அகிலன்***
முனைவர் பட்ட ஆய்வாளர், மொழி மற்றும் தொடர்பாடல் புலம்
உப்சி கல்வியியல் பல்கலைக்கழகம்

***ஆய்வுச் சுருக்கம்***
*மலேசியத் தமிழ் நாட்டுப்புறப் பாடல்களில் கைம்பெண்களின் துயர நிலை இடம் பெற்றுள்ளது. இரா. தண்டாயுதம் தொகுத்து வெளியிட்ட மலேசியத் தமிழ் நாட்டுப்புறப் பாடல் தொகுப்பு முதன்மைச் சான்றாதரமாகப் பயன்பட்டுள்ளது. கைம்பெண்கள் தாலியை நீக்குதல், மஞ்சள் பூசாமல் இருத்தல், பட்டுச் சேலை, பூ, அணிகலன்கள் போன்றவற்றை விலக்குதல், ஆகிய செயல்பாடுகள் நாட்டுப்புறப் பாடல்களில் வெளிபட்டுள்ள முறை ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.*

***முக்கியச் சொற்கள்:*** *கைம்பெண், நாட்டார் வழக்காற்றியல், மலேசியத் தமிழ் நாட்டுப்புறப் பாடல்கள், தாலி, மஞ்சள், பூ, உணவு, தற்கொலை, பெண்களின் அவலநிலை.*

## முன்னுரை

இறப்பின் காரணமாக கணவனை இழந்து விட்ட பெண்கள் விதவை அல்லது கைம்பெண் என்று அழைக்கப்படுகின்றனர் (Bhaksi, 2024). வைதிக இந்து சநாதனம் பாரம்பரியமாக இவர்களைத் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதுகிறது (Priyadarshini Pande, 2021). அதுமட்டுமல்லாது, சமூக விதிகள், பண்பாட்டு நம்பிக்கைகள் மற்றும் பாரம்பரிய நடைமுறைகள் அல்லது செயல்பாடுகள் கைம்பெண்களை ஆழமான அடக்குமுறைகளுக்கு ஆட்படுத்துவதோடு, அவர்களின் வாழ்க்கையைச் சவால்மிக்கதாக மாற்றுகின்றன (Subapradha Subramaniam, 2022). பொதுவாகக் கைம்பெண்கள் ஏனைய பெண்களைப்போல இயல்பாக வாழ்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் வெள்ளை ஆடைகள் அல்லது புடவைகளை வாழ்நாள் முழுதும் அணிதல் மற்றும் தாலியைக் கழுத்திலிருந்து நீக்கி விடுதல் போன்ற துக்கத்தைக் காட்டுகின்ற சடங்குகளை மேற்கொள்ள சமூகத்தால் எதிர்பார்க்கப்படுகின்றனர் (Bajaj, 2023; Pooja Sofia, 2023; Rai, 2021). மேலும், வெளிறிய நிறத்திலான ஆடைகளை மட்டுமே அணிந்துகொள்ள அவர்கள் அனுமதிக்கப்படுவதோடு எந்தவிதமான சுய அலங்காரங்கள் செய்து கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை (Kanna, 2023). இவற்றோடு, அவர்கள் கைம்பெண்கள் என்பதை வெளிப்படையாகக் காட்டுவதற்காகத் தலைமுடியை மழித்தல், வளையல்களை உடைத்தெறிதல், அணிகலன்களை நீக்குதல் போன்ற சடங்குகளும் திணிக்கப்படுகின்றன. இவை கைம்பெண்களின் பெண்ணியத்தை நீர்க்கச் செய்வதை முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளதோடு, சமூகத்தின் படிநிலையிலிருந்து அவர்களை வெளியேற்றி அவர்களின் மீதான அடக்குமுறைகளை நிலைநிறுத்துவதைத் தொடர் நோக்கங்களாகக் கொண்டுள்ளன. (Priyadarshini Pande, 2021). மலேசியத் தமிழ் நாட்டுப்புறப் பாடல்களில் சித்திரிக்கப்பட்டுள்ள கைம்பெண்களும் சடங்கியல் ரீதியில் ஒடுக்குமுறைகளுக்கு ஆட்பட்டவர்களாகவே உள்ளனர்.

## தாலியை நீக்குதல்

இந்துச் சமூகம் தாலியை வளப்பம், ஆசி, மகிழ்ச்சி ஆகியவற்றோடு திருமணச் சடங்கின் புனிதத்தைக் காட்டுகின்ற

சின்னமாகக் கருதுகின்றது. மேலும், தாலி என்பது மணமக்களின் ஒன்றிணைவைச் சுட்டுவதோடு அவர்களிடையிலான ஒருமித்தப் பொறுப்புணர்வையும்காட்டுகிறது. இவற்றோடு, மறைமுகமாக ஒரு கணவனுக்கு மனைவியின் மீதுள்ள அதிகாரத்தையும் தாலி புலப்படுத்துவதோடு மனைவிக்குக் கணவனின் நலனின் மீது இருக்க வேண்டிய விசுவாசத்தையும் அர்ப்பணிப்பையும் காட்டுகிறது (Gowda, 2018). எனவே, கணவனின் இறப்பிற்குப் பின் பெண், மனைவி என்ற தகுதியை இழந்து விடுகிறாள் என்பதைக் காட்டுவதற்காகத் தாலி நீக்கப்படுகிறது. இது அவர்களைத் துன்பியல் நிலைக்குத் தள்ளி சுய மேம்பாடு மேற்கொள்ள இயலாத சூழலை அவர்களிடையே ஏற்படுத்தி விடுகிறது (Watson, 2018).

மலேசியத் தமிழ் நாட்டுப்புறப் பாடல்களிலுள்ள இரண்டு பாடல்கள் பெண்களின் தாலி நீக்கும் சடங்கைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

..

**நான் தாலிக் கழட்டி வைக்க**
**தருமருக்கோ சம்மதமோ**

..

**(தண்டாயுதம், கட்டிக்கொடுத்தீங்களே!, 166)**

..

**தாலிக்கு-**
**வம்புவந்த நேர்ந்துச்சோ**

..

**(தண்டாயுதம், சுத்தம் பண்ணப் போறீங்களா?, 168)**

ஒப்பாரிப் பாடல்கள் கணவனின் மறைவிற்குப் பின்பு பெண்களின் தாலிகள் நீக்கப்படும் சூழலைப் பதிவாக்கியுள்ளன. இச்சடங்கு அவர்களிடையே சொல்லொணா துன்பத்தை ஏற்படுத்தியுள்ளதை அவர்களின் சொற் பயன்பாடுகள் காட்டுகின்றன. பாடல்கள், பெண்ணின் மனைவியென்ற சமூகத் தகுதி நீங்குவதையும், அது அவர்களிடையே ஏற்படுத்தியுள்ள உளவியல் ரீதியான பாதிப்பையும் அச்சத்தையும் காட்டுகின்றன. திருமணமான பெண்களுக்குத் தாலியின் முக்கியமான அடையாளமானதைக் காட்டுகிறது.

### மஞ்சள் பூசுதல்

இந்தியப் பண்பாட்டில் மஞ்சள் என்பது புனிதமான மங்கலப் பொருளாகும். பாரம்பரியமாகப் பெண்கள், ஆசூழின் அடையாளமாக குளிப்பதற்கு முன்பாக தங்களின் உடல், முகம், தாலியில் மஞ்சளைப் பூசிக்கொள்வது வழக்கமாகும் (Vijayasankar Kaliaperumal, 2023; Obeta et al., 2023). ஆனால், கணவன் இறந்தபிறகு கைம்பெண்கள் மஞ்சள் பூசுவதிலிருந்து தடை செய்யப்படுகின்றனர். இறுதியாக, கணவனின் இறுதிச் சடங்குகளின்போது பெண்களுக்கு மஞ்சள் பூசப்படுகிறது (Smith, 2012). அதன்பிறகு, அவர்கள் மீண்டும் மஞ்சள் பூசுவதற்கு செய்ய அனுமதிக்கப்படுவதில்லை.

மலேசியத் தமிழ் நாட்டுப்புறப் பாடல்களில் இந்தக் கட்டுப்பாடு ஒரு பாடலில் உருவகமாகக் வெளிப்பட்டுள்ளது.

..

**உலர்ந்த மஞ்சள் என் கையிலய்யா**

..

**(தண்டாயுதம், ஒய்யாரம் எண்டு,152)**

இந்தப் பாடலில் ஒரு பெண் தன் கையிலுள்ள மஞ்சள் உலர்ந்து விட்டதாகப் பாடியுள்ளாள். இது அவள் மஞ்சள் பூசி நெடுநாட்கள் ஆகி விட்டதைப் புலப்படுத்துகிறது. அதோடு, கணவனின் மறைவிற்குப்பிறகு, சமூக பண்பாட்டின் அடிப்படையில் அவளுக்கு நேர்ந்துள்ள இழப்பு, வாழ்வின் தேக்கம், வாழ்வின் அடிப்படையிலிருந்து புறக்கணிப்பு ஆகியவற்றையும் இந்தப் பாடல் காட்டுகிறது.

**பட்டுச் சேலை, பூ , அணிகலன்கள் விலக்கு**

இந்திய நாட்டில் கைம்பெண்கள் துக்கத்தின் சின்னமாக வெள்ளைச் சேலைகளை அணிந்துகொள்கின்றனர். அந்த வெள்ளைச் சேலை கைம்பெண்ணின் அடையாளமாகும். மலேசியத் தமிழ் நாட்டுப்புறப் பாடல்களிலும் இந்தியப் பெண்கள் கணவனின் இறப்பிற்குப் பிறகுப் பட்டுச் சேலைகளைத் துறந்து வெள்ளைச் சேலை அணிந்துள்ளதைக் காண முடிகிறது.

..

**நா பட்டுத்துணி கட்டும் சேல**
**முண்டச்சி கட்டும் சேல**

..

***(தண்டாயுதம், சுத்தம் பண்ணப் போறீங்களா?, 168)***

பாடல் மலேசியத் தோட்டப்புறங்களில் முழுமையாக வெள்ளைச் சேலைக்கு மாறுவதற்கு முன்பாக இறுதியாக பட்டுச் சேலை அணிந்துகொண்ட பெண்ணின் துயரத்தைக் காட்டுகிறது.

மலேசியத் தமிழ் நாட்டுப்புறப் பாடல்கள், கைம்பெண்கள் பூச்சூடியும் அணிகலன்கள் அணிந்தும் தங்களை அலங்கரித்துக் கொள்வதிலிருந்து விலக்கப்பட்டுள்ளதைப் பதிவாக்கியுள்ளன. இந்தியச் சமூகம், ஆண்களின் ஆசைகளை அடக்குவதற்காகவும், கைம்பெண்கள் மீதான அவர்களின் பாலியல் உணர்வுகளைத் தடுப்பதற்காகவும் பூச்சூடவும் அணிகலன்களை அணிந்து கொள்ளவும் தடை விதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது (Paul Das, 2023; Khan Shah, 2024).

..

**ஒட்டியாணம் பொட்டியிலே**

..

***(தண்டாயுதம், ஒய்யாரம் இண்டு, 152)***

..

**மன்னவன் இல்லாம**
**நா பூ வச்சுப் பாக்கவோ?**

..

***(தண்டாயுதம், மல்லியப்பூ வாடுதய்யா, 161)***

பாடல் வரிகள் கைம்பெண்களின் அலங்கார சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளதைக் காட்டுகின்றன. அதுமட்டுமல்லாது, இரண்டாவது பாடலில், ஒரு பெண் தன்னுடைய கணவன் தான் பூச்சூடி அலங்கரித்துக் கொள்ளவோ என்று வினவுவது, காலங்காலமாக பெண்கள் கணவன் இறந்து விட்டால் பூச்சூடிக் கொள்ளக்கூடாது என்ற மரபில் ஊறியிருப்பதைக் காட்டுகிறது. அதோடு, சமூகத்தில் பெண்களின் மீதான கட்டுப்பாடுகளும் விதிகளும் அழுத்தமாக பதிந்துள்ளதையும் தெளிவாகக் காட்டுகிறது.

**சத்தான உணவின்மை**

சுய அலங்காரங்களைக் கடந்து இந்திய கைம்பெண்கள் சத்தான உணவு போன்ற அடிப்படை தேவைகளைப் பெறுவதிலும் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர் (Verma et al., 2023). இந்துப் பாரம்பரியம் கைம்பெண்கள் உணர்வுகளைத் தூண்டுகின்ற வெங்காயம், பூண்டு, உருளைக் கிழங்கு, ஊறுகாய் வகைகள், இறைச்சி போன்ற உணவுகளை சாப்பிடக் கூடாதுஎன்று வலியுறுத்துகிறது (Loomba, 2023). மேலும், அவர்கள் தங்களுடைய பாலியல் உணர்வுகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க இரண்டு வேளைகள் ஆறிப்போன உணவுகளை மட்டுமே எடுத்துக்கொள்ள வேண்டும் எனக் கூறப்படுகிறது (Dave, 2020; Khan Shah, 2024). இதுபோன்ற உணவின் மீதான கட்டுப்பாட்டை மலேசியத் தமிழ் நாட்டுப்புறப் பாடல் காட்டுகிறது.

..

**கட்டுனபொண்டாட்டிக்குக்**
**களவரிசி கொடுத்துட்டியே**

..

***(தண்டாயுதம், காசி விசிறி வரும், 130)***

என்ற பாடலில் மனைவியானவள் தான் இதற்கு பிறகு சுவையான இயல்பான உணவுகளை எடுத்துக் கொள்ள முடியாது என்பதைக் கணவன் தனக்கு அரிசி கொடுத்து விட்டான் என்று கூறி வருந்துகிறாள்.

**தற்கொலை எண்ணம்**

பொதுவாகச் சமூல அடக்குமுறைகள் கைம்பெண்களின் வாழ்வினை மிகவும் துன்பமிக்கதாக மாற்றுகின்றன. எனவே, அவர்கள் இது போன்ற துன்பங்களைச் சகித்துக்கொள்வதைவிட தற்கொலை செய்து கொள்வது மேல் என்ற எண்ணத்திற்குத் தள்ளப்படுகிறன்றனர். கதம்பம் மலருமிடம் (தண்டாயுதம், 186) என்ற பாடல் தற்கொலை எண்ணம் மலாயா தோட்டத்தில் வாழ்ந்த கைம்பெண்களான இந்தியப் பெண்களிடம் இருந்துள்ளதைப் பதிவாக்கியுளளது. அதோடு, இன்னும் சில சூழல்களில் அவர்கள் அவர்களுடைய துன்பங்களைக் கண்ணீரோடு வெளிப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், கணவனுக்கு அருகிலேயே தங்களைப் புதைத்து விடவும் வேண்டியுள்ளனர். கீழ்க்கண்ட பாடல்கள் அதைக் காட்டுகின்றன.

..

**நாமண்ணோடுமங்கி**
**ஐயா இருந்துட்டுப் போறன்**

..

***(தண்டாயுதம், ஆடி அமுந்தாலும், 161)***

..

**சிந்துவேன்கண்ணீரு**

..

***(தண்டாயுதம் காசி விசிறி வரும், 130)***

மலேசியத் தமிழ் நாட்டுப்புறப் பாடல்களில் இடம் பெற்றுள்ள கைம்பெண்கள், தங்களுடைய கணவனின் மரணத்திற்குப் பின்னர் அவல வாழ்க்கை வாழ்ந்ததை அறிய முடிகிறது. உணர்வு ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் ஏற்பட்டுள்ள ஆழமான பாதிப்புகள் காரணமாகக் கைம்பெண்கள் எதிர்மறையான முடிவுகளை எடுத்ததை அறிய முடிகிறது.

**முடிவுரை**

மலேசியத் தமிழ் நாட்டுப்புறப் பாடல்களிலுள்ள கைம்பெண்கள் சமூகக் கட்டுப்பாடுகளினாலும் உணர்வு ரீதியான துன்பங்களினாலும் பாதிக்கப்பட்டுள்ளவர்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர். தாலி நீக்கம், அலங்கரித்துக் கொள்வதில் கட்டுப்பாடு போன்றவற்றுடன் சத்தான உணவின்மை காரணமாகப் பெண்கள் எதிர்கொண்ட துயர வாழ்க்கை நாட்டுப்புறப் பாடல்களில் அழுத்தமாக வெளிப்பட்டுள்ளன.

**குறிப்புகள்**

1. பக்ஷி, ஏ. (2024). இந்தியாவில் மனித உரிமைகள் மீறலுக்கு வழிவகுக்கும் விதவைகள் நடைமுறைகள். இண்டர்நேஷனல் ஜர்னல் ஃபார் மல்டிடிசிப்ளினரி ரிசர்ச்
2. பிரியதர்ஷினி, யு. பாண்டே, ஆர். (2021). விருந்தாவனத்தில் விதவைத்துவத்தின் அரசியலை ஆராய்தல்: விருந்தாவன விதவைகளின் வாழ்க்கை கதைகளின் பகுப்பாய்வு. அட்வான்சஸ் இன் அப்ளைடு சோசியாலஜி, 11, 158-176.
3. சுபப்பிரதா, பி.சுப்ரமணியம், எஸ். (2022). அம்பாயின் “மூலையில் உள்ள சமையலறை” படைப்பில் விதவைத்துவம். இண்டர்நேஷனல் ஜர்னல் ஆஃப் ஹியுமானிட்டீஸ் அண்ட் சோஷியல் சயின்ஸ் இன்வென்ஷன் (IJHSSI), 11(9), 61-63.
4. பஜாஜ், ஆர். (2023). இந்து விதவைகளின் சட்ட உரிமைகளில் பரிணாமம். ஜர்னல் ஆஃப் சர்வே இன் ஃபிஷரீஸ் சயின்சஸ், 10(1), 6774-6778.
5. பூஜா, டி.சோஃபியா, எச். (2023). இந்திய பெண்களின் அடையாளமாக புடவை. இண்டர்நேஷனல் ஜர்னல் ஆஃப் ஹியுமானிட்டீஸ்சோஷியல் சயின்ஸ் ஸ்டடீஸ் (IJHSSS), 12(2), 73-78.
6. ராய், ஏ. (2021). சதி - விதவைதகனத்திலிருந்து விதவை மறுமணம் வரை. ஜர்னல் ஆஃப் ரிசர்ச் இன் ஹியுமானிட்டீஸ் அண்ட் சோஷியல் சயின்ஸ், 9(3), 05-08.
7. தண்டாயுதம், ஆர். (1998). மலேசிய நாட்டுப்புறப் பாடல்கள். தமிழ் புத்தகாலயம்: சென்னை.
8. கோமதி, ஜி. (2018). மங்கள்சூத்ரா: இந்தியாவில் திருமணத்தின் குறியீடாக பெண்களின் புனித தாலி. சார்க் கலாச்சாரம், 6, 22-34.
9. வாட்சன், எம். (2018). மறக்கப்பட்ட, கண்ணுக்குத் தெரியாத மற்றும் பாதிக்கப்படக்கூடிய லட்சக்கணக்கான சிறுமி விதவைகள் குறித்த அறிக்கை - குழந்தை, இளம் மற்றும் கட்டாயத் திருமணம் மீதான செயல்பாடு. ஐ.நா. ஜெனீவா பிரதிநிதி, சர்வதேச பெண்கள் கவுன்சில் (ICW&CIF): சுவிட்சர்லாந்து.